வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1576/B2/2023 நாள்.11.04.2023

பொருள் வேலூர் மாவட்டம் –சுற்றுச் சூழல் – ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை – ஒருமுறை பயன்படுத்தும் மற்றும் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் தடையை அமல்படுத்துவதை கண்காணிக்க மாவட்ட அளவிலான பணிக்குழு அமைக்கப்பட்டது – மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 11.04.2023 அன்று நடைபெற்ற கூட்டம் – பள்ளிகளில் மாசுபாட்டை குறைப்பதற்கான தேவையான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்வது – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அலுவலக குறிப்புக் கடிதம் நாள்.11.04.2023 (மா.சு.சூ பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், வேலூர்.)

-----------

வேலூர் மாவட்டம், ஒருமுறை பயன்படுத்தும் மற்றும் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடையை அமல்படுத்துவதை கண்காணிக்க மாவட்ட அளவிலான பணிக்குழு கூட்டம் வேலூர். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 11.04.2023 அன்று கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் அனைத்துவகை பள்ளிகளில் NCC, NSS, சாரணர், இளைஞர் சங்கம், சுற்றுச்சூழல் சங்கம், கருத்து தயாரிப்பாளர்கள் மற்றும் தன்னார்வளர் தொண்டு நிறுவனம் மூலம் பிளாஸ்டிக் மாசுபாட்டை குறைப்பதற்கான வலுவான பொது இயக்கத்துடன் தேவையான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

எனவே வேலூர் மாவட்டத்திள்ள அனைத்து வகை பள்ளிகளிலும் மேற்காண் பொருள் குறித்து பள்ளி சுற்றுச் சுவர்களில் விழிப்புணர்வு வாசகங்களை எழுத நடவடிக்கை மேற்கொள்ள அனைத்துவகை தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு ( இடைநிலை, தொடக்கக் கல்வி, தனியார் பள்ளிகள்) தெரிவிக்கப்படுகிறது.

(PTO)

## விழிப்புணர்வு வாசகங்கள்

a. பிளாஸ்டிக் இல்லாத பள்ளி.
b. பிளாஸ்டிக் பயன்படுத்தாத பள்ளி.
c. துணிப்பை என்பது எளிதானது
   தூரம் எறிந்தால் உரமானது.
d. பிளாஸ்டிக் ஒழிப்போம் நீர்வளம் காப்போம்.
e. கடைக்குச் செல்லும்போது துணிப்பை,
   தேவையில்லை பிளாஸ்டிக் பை.
f. பிளாஸ்டிக் ஒழிப்போம், வளமான எதிர்காலத்தை உருவாக்குவோம்.
g. பிளாஸ்டிக்கை வாங்காதே, நமது பூமி தாங்காதே.
h. பிளாஸ்டிக் இல்லா உலகம் படைப்போம்.
i. பிளாஸ்டிக் பை தவிர்ப்போம், மனித வளம் காப்போம்.
j. பிளாஸ்டிக்கை விடு, துணிப்பையை எடு

மேலும் மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாணவர்களாகவே விழிப்புணர்வு வாசகங்களை எழுதச் செய்யலாம்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை, தொடக்கக் கல்வி, தனியர் பள்ளிகள்) வேலூர் – தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
2. அனைத்து வகை அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்.

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.